DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No C.C.No. 100/2023 LW- 9 PW- 7

| | |
|---|---|
| Name | : சிவக்குமார் ( மருத்துவர்) |
| Father's/Husband's Name | : ஜோதிகிருஷ்ணன் |
| Village | : திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026

( 1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜர். 2, 8 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 7ம் எதிரி இறப்பு. இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.2020 அன்று நத்தம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, அதிகாலை 12.00 மணிக்கு நத்தம், பன்னியாமலையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன், வயது 22, த/பெ.குருசாமி என்பவரை அவரது தந்தை குருசாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் பார்த்தபோது வலது சுண்டு விரலில் கருப்பு மச்சம் ஒன்று, இடது தொடையில் காயத்தழும்பு இருந்தது. அவரை நான் விசாரித்தபோது அவர் தன்னை 08.05.2020அன்று இரவு 11.00 மணியளவில்

அடையாளம் தெரிந்த 4 நபர்கள் இரும்பு கம்பியால் அவரது ஊரில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது, இடது பின் பக்க தலை பகுதியில் சிதைந்த காயம் காணப்பட்டது. அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த ஆவணங்கள் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் நான் வழங்கியதுதான். (**ஜெயச்சந்திரன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயமானது இரும்பு கம்பியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.**

2. ஜெயச்சந்திரன் என்பவர் என்னிடம் கடந்த 08.05.2020 ஆம் தேதி இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொன்னார் என்றால் சரிதான். தெரிந்த நான்கு நபர்கள் தாக்கியதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். பெண் நபர் வந்து தாக்கியதாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். மேல் சிகிச்சைக்காக ஜெயச்சந்திரன் என்பவரை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் இன்றைய தினம் அனுப்பினேன் என்றால் தெரியவில்லை. ஜெயச்சந்திரன் என்பவருக்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் என்ன விதமான சிகிச்சை அளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே ஸ்கேன் மற்றும் மற்ற அறிக்கைகள் நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான், காய கருத்துரை வழங்கியதன் அடிப்படையில் காயசான்றிதழ் வழங்கியுள்ளேன்.

3. பொதுவாக ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தால் நான் சொல்லக்கூடிய காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. ஜெயச்சந்திரன் என்பவருடன் வேறு யாராவது காயம் பட்டு என்னிடம் சிகிச்சை பெற்றார்களா என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் சொன்னதேதியில் சொன்ன விதத்தில் சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும், முறையாக மருத்துவ சிகிச்சை ஆவணங்களை பார்வையிடாமல் காய சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபர் என்றைய தேதியில் சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம் பட்ட நபரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக குறிப்புகள் எதுவும் காய சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.24 13:05:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்